இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12-10-2024

# முரசொலியின் செல்வமே!



முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை 'முரசொலி'யின் வளர்ச்சி, வரலாறு, சாதனைகள் அனைத்திலும் கலந்துள்ள மூச்சுக்காற்றாம் முரசொலி செல்வத்தின் மூச்சு அடங்கி இருக்கிறது. அவரது மூச்சும் பேச்சும் அடங்கி இருக்கலாம். ஆனால் அவர் விதைத்த விதை விருட்சமாக வளர்ந்து கொண்டே இருக்கும்.

'முரசொலி' செல்வம் யார்? முத்தமிழறிஞர் குடும்பத்தைச் சேர்ந்தவரா? இல்லை. முரசொலி குடும்பத்தைச் சேர்ந்தவர். கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். செல்வம் என்ற பெயருக்கு முன்னால் ஒட்டி இருக்கும், 'முரசொலி' என்ற சொல்லே அவரது வரலாற்றைச் சொல்லும்!

**கலைஞர் அவர்கள் ஆசிரியராக இருந்த காலத்தில், துணை ஆசிரியராக முரசொலி மாறன் அவர்கள் இருந்த நேரத்தில், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த செல்வம், பகுதி நேரமாக முரசொலியில் பணியாற்ற ஆரம்பித்து முரசொலியை உயிர்ப்புடன் வளர்த்தவர். தன் மூச்சு அடங்கும் கடைசி நிமிடங்கள் வரை முரசொலிக்குப் பங்காற்றினார். அவர் மரணத்தைத் தழுவுவதற்கு இரண்டு நாட்கள் முன்புகூட முரசொலியில் கட்டுரை எழுதிவிட்டு, அடுத்த கட்டுரைக்கான குறிப்புகளை எடுத்து வைத்துவிட்டு, கண்ணயர்ந்த நேரத்தில்தான் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார்.**

கலைஞர், முரசொலியைக் கண்ணைப் போலக் காத்தார் என்றால், செல்வமோ அதனை வளர்த்தார். கலைஞர் முரசொலியை படை வீரனாக நடத்திய போது, அவரது எண்ணத்தை வழிநடத்திச் செல்லும் படைத்தளபதியாக இருந்தார் செல்வம். முரசொலியின் ஆசிரியராக கலைஞருக்குப் பிறகு முரசொலி மாறன் இருந்தார். அவர் ஒன்றிய அமைச்சரான பிறகு, அந்தப் பொறுப்பிற்கு செல்வம் வந்தார். அதற்கான தகுதி அவரிடம் இயல்பாகவே இருந்தது. தி.மு.க.வின் கொள்கை முரசாக மட்டுமல்ல, தி.மு.க.வுக்கு எதிரான அவதூறுகளைத் தடுத்து நிறுத்தும் கேடயமாகவும், பதிலடி தரும் வாள் ஆகவும் முரசொலியை முன்நிறுத்தினார்.

**செய்திகள், கட்டுரைகளை எல்லாம் உருவாக்கும் பொறுப்பில் இருந்ததால் முரசொலியின் பல செய்திகளை அவர் அறிந்திருந்தார். பல நிகழ்வுகளை நினைவில் வைத்திருந்தார். அதனால்தான், "முரசொலி செல்வம் முரசொலிக்கு ஆசிரியர் மட்டுமல்ல, எனக்கு வழிகாட்டியாகவும் இருக்கக் கூடியவர்" எனப் பதிவு செய்திருக்கிறார் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

அவர் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்புக்கு வந்த தொடக்க காலத்தில் 'செல்வத்திடம்தான் மாநாட்டு உரைகளைத் தயார் செய்வது தொடர்பாக ஆலோசனை கேட்பேன்' என்று தலைவரே சொல்லி இருக்கிறார். உரையில் என்னென்ன கருத்துக்கள் இடம்பெற வேண்டும்; அதனை எப்படிச் சொல்ல வேண்டும் என்று பயிற்சி கொடுத்தவர் செல்வம்.

ஆதித்தனார் எழுதிய 'இதழாளர் கையேடு'தான் ஊடகத் துறைக்கு வருகிறவர்களுக்கு வழிகாட்டி எனச் சொல்வார்கள். அதே போல ஒரு வழிகாட்டிதான் 'முரசொலி – சில நினைவலைகள்' நூலும்! ஊடகத் துறையில் நுழைபவர்களுக்கு அது ஒரு ஆத்திசூடி. அனுபவங்களின் களஞ்சியம்: செய்திகளின் குவியல்; வரலாற்றுத் தகவல்களின் மலை எனப் பெருமைகளைக் கொண்ட அந்தப் புத்தகம் ஊடகத் துறையினருக்கான அற்புதமான பாடப்புத்தகம். இந்தி எதிர்ப்புப் போராட்டம், நெருக்கடி நிலைப் பிரகடனம், எம்.ஜி.ஆர், காலத்து அடக்குமுறைகள், ராஜீவ் காந்தி மரணத்தைத் தொடர்ந்து நடந்த தாக்குதல்கள், ஜெயலலிதாவின் அத்துமீறல்கள் என வரலாற்று நிகழ்வுகளை அந்த நூலில் பதிவு செய்திருக்கிறார். அதனால்தான் அதனை 'செல்வம் கொடுத்த செல்வம்!' என மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு செய்திருக்கிறார்.

கொள்கைவாதி என்பதைத் தாண்டி பத்திரிகையாளராக தன் கடமையை துணிச்சலோடு செய்தவர். அதற்காகவே எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அடக்குமுறைக்கு ஆளானார். இரண்டு ஆட்சியிலும் செல்வம் கைது செய்யப்பட்டார். திருச்செந்தூர் கோவில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மர்மக் கொலை தொடர்பாக அமைக்கப்பட்ட நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை எம்.ஜி.ஆர். அரசு வெளியிடாமல் பதுக்கி வைத்திருந்த போது, எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் வெளியிட்டார். இதனால் கோபடைந்த எம்.ஜி.ஆர். அரசு, முரசொலி அலுவலத்துக்குள் சோதனை நடத்தியது. அரசு அதிகாரி சதாசிவம், கலைஞர் உதவியாளர் சண்முகநாதன் ஆகியோரோடு சேர்ந்து செல்வத்தையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றிலேயே முன்னும் பின்னும் நடக்காத நிகழ்வு; செல்வத்தை கூண்டில் ஏற்றி தண்டித்தது. செய்யாத தவறுக்கு மன்னிப்புக் கேட்காமல், அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்டமன்றத்தில் கூண்டிலேறி நின்றார். தி.மு.க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி ஆற்றிய உரையின் ஒரு பகுதியை அவைக் குறிப்பில் இருந்து நீக்கினார் சபாநாயகர். முற்பகலில் நடந்த உரையை பிற்பகலில் நீக்கினார் சபாநாயகர். முரசொலியின் வெளியூர் பதிப்பு பகல் 2 மணிக்கு முடிக்கப்பட்டதால், அதுவரை நீக்கப்படாத உரையுடன் முரசொலி வெளியூருக்கு அனுப்பப்பட்டது.

'சபாநாயகர் காலம் தாழ்த்தி எடுத்த முடிவால் வெளியூர் பதிப்பில் செய்தி வெளியாகிவிட்டது' என முரசொலி ஆசிரியர் செல்வம் கொடுத்த விளக்கத்தை ஏற்காமல் போலீஸார் செல்வத்தை கைது செய்து சபாநாயகர் முன்பு ஆஜர்படுத்தினார்கள். அவையின் உரிமையை மீறிய குற்றத்திற்காக அவையின் கண்டனத்தைப் பெற சட்டப்பேரவை கூடும் நாளில் நேரில் ஆஜராக முரசொலி செல்வத்துக்கு சம்மன் அனுப்பினார்கள். அதனை கலைஞரிடம் காட்டினார் செல்வம். "சென்று வா. ஆனால், உன் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் கருப்பு உடை அணிந்து செல்'' என ஆலோனை கொடுத்தார் கலைஞர். சட்டமன்றத்தில், நீதிமன்றத்தில் இருப்பது போன்ற சிறப்புக் கூண்டு தயாரிக்கப்பட்டு செல்வத்தை கூண்டில் ஏறி நிற்க வைத்தனர்.

**'இந்தியத் துணைக் கண்டத்தில் இத்தகைய பெருமை யாருக்குக் கிடைத்திருக்கிறது? எந்தப் பத்திரிகையாளருக்கு இந்தப் பதவி கிடைத்திருக்கிறது? பூனைக்கல்ல. புலிக்கும். சிங்கத்துக்கும்தான் 'கூண்டு' கிடைக்கும். எங்கள் சிங்கமே! செல்வமே! சென்று வருக!' என கழக முன்னோடி இராம. அரங்கண்ணல் வாழ்த்தினார். கலைஞரோ "கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்" என அகமகிழ்ந்தார்.**

திராவிட இயக்கத்தின் தீரமிகு தளகர்த்தரான சர் ஏ.டி.பன்னீர் செல்வம் நினைவாக 'செல்வம்' என்று பெயர் சூட்டியது முதல், அண்ணா அவர்கள், 'செல்வா' என்று செல்லமாக அழைப்பது வரை, அனைத்தையும் சொல்லி மகிழ்ந்தார் கலைஞர். அடுத்து முதல்வர் ஜெயலலிதாவின் சட்டசபை நடவடிக்கைகள் குறித்து எழுதியதற்காக 2003 நவம்பரில் முரசொலி, இந்து பத்திரிகையாளர்கள் 6 பேருக்கு 15 நாள் தண்டனை விதிக்கப்பட்டது. அதில் செல்வமும் ஒருவர்.

**கலைஞரும், மாறனும் இல்லாத நிலையில், அவர்களது இடத்தில் இருந்து முரசொலியை வழிநடத்தக் கூடியவராக செல்வம் இருந்தார். அன்றைய முரசொலியில் என்னென்ன வர வேண்டும், நம்மை விமர்சிப்பவர்களுக்கு என்ன மாதிரியான பதிலடி தர வேண்டும் என கவனத்தோடு களமாடி வந்தார். அவரது 'சிலந்தி' கட்டுரைகள்; எதிரிகள் பதில் சொல்ல முடியாத மறுப்பாக இருக்கும். இனி சிலந்தியைத் தேடும் ஒவ்வொரு கண்ணும் கண்ணீர் சிந்தும். ஒவ்வொரு நாளும் கண்ணீர் சிந்தும்.**

**யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? எல்லார்க்கும் ஆறுதல் சொல்லும் முரசொலிக்கு யார் ஆறுதல் சொல்வது?**



மகத்தான மனித நேயப் பண்பாளர் முரசொலி செல்வம் – திருமதி செல்வி செல்வம் இணையருடன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் மு.க.அழகிரி, முதல்வர் மு.க.ஸ்டாலின், மு.க.தமிழரசு ஆகியோர் உள்ள அன்பு தவழும் காட்சி!



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

### அமைச்சர் – முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது!

# வனத்துறை – மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம்!

## வன ஆக்கிரமிப்புகளை அகற்றி – வனத்தினை மீட்க அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுரை!

*சென்னை, அக். 12-*

வனத்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.10.2024) கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் வனப்பாதுகாப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் முன்னேற்றம் குறித்தான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இரண்டாவது நாளாக நடைபெற்ற இக்கூட்டத்தில் சேலம், விழுப்புரம், சென்னை, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திருச்சி, அறிஞர் அண்ணா வன உயிரியல் பூங்கா வனவிலங்கு பாதுகாப்புக்கான மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் மண்டல அலுவலர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, துறைரீதியாக நடைபெற்று வரும் பணிகள் முன்னேற்றம் குறித்தும், மாவட்டவாரியாக நடைபெற்று வரும் கோட்ட செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து பணிகள் அனைத்தும் உரிய காலத்தில் துரிதமாக செய்து முடிக்க ஆலோசனைகள் வழங்கினார்.

2024-2025ம் ஆண்டுகளில் வனத்துறை அறிவிப்புகளின் தற்போதைய நிலை பற்றி கேட்டறிந்து அதனை விரைந்து செயல்படுத்த அறிவுரைகள் வழங்கினார். தமிழ்நாட்டில் உள்ள வன ஆக்கிரமிப்புகளை அகற்றி வனத்தினை மீட்க அனைத்து அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். வனத்துறை தொடர்பான பல்வேறு முக்கிய திட்டங்கள் பற்றி கேட்டறிந்தார். தமிழ்நாட்டின்; வனப்பரப்பை அதிகரிக்க மண்டல அலுவலர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்களை அறிவுறுத்தினார். வனத்துறையின் வளர்ச்சி திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மனித விலங்கு மோதல்கள் சம்பந்தமாகவும் கடலூரில் உள்ள கொல்லிடம் ஆற்றில் முதலைகள் தாக்குதல் சம்பந்தமாகவும், வனப்பாதுகாப்புச்சட்டம் மற்றும் வன உரிமைச்சட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கப்படுவது குறித்தும், மரக்காணத்தில் கல்வேலி ஓடையின் குறுக்காக தடுப்பணை கட்டுவது குறித்தும் வனத்துறையின் சார்பாக கள்ளக்குறிச்சி பிரிவு உருவாக்கம் சம்பந்தமாகவும் வனத்துறை அமைச்சர் அவர்களால் விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத் துறைத்தலைவர்) சீனிவாஸ் ரா.ரெட்டி மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மக்கள் நலனில் முதல்வர் தலைமையிலான அரசு ஒளிவுமறைவற்ற அரசு!

## கிராம சபைக் கூட்டத்தில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, அக். 12-*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கல்லல் தாலுகா மேல பட்ட மங்கலத்தில் அண்ணல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் முன்னிலையில் நடைபெற்றது. திட்ட இயக்குனர் ராம.சிவராமன் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய. கருப்பன் பேசியதாவது.

அண்ணல் காந்தியடிகள் நாடு முன்னேற வேண்டும் என்று விரும்பினார். அதிலும் குறிப்பாக கிராமங்கள் அதிக அளவில் முன்னேற்றம் பெறவேண்டும். அதன் மூலம் கிராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அண்ணல் காந்தி அதற்காக பாடுபட்டார். காந்தி பிறந்த நாளில் இன்று கிராம சபை கூட்டம் நடைபெறுவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். இந்த கூட்டம் நடைபெறுவதால் கிராமத்தின் தேவைகள் தீர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வருடத்தில் 6. முறை இத்தகைய கிராமசபை கூட்டம் நடைபெற்று வருகின்றது. இத்தகைய கூட்டம் நடைபெறுவ தால் நடைபெற்று. வரும் அரசின் திட்டப் பணிகள் மக்களுக்கு நேரடியாக போய் சேர்கிறதா என்பதை நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் தலைவர் தளபதி ஆட்சியில் தமிழகம் பல்வேறு வகையில் முன்னேறியுள்ளது.. தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது கிராம மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து அதை நிறைவேற்றினார்.

கிராமங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினார். அவர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் கிராமத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்ற அயராது பாடுபட்டு வருகிறார். தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த பொழுது ராமநாதபுரம் சிவகங்கை மாவட்ட. மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுத்தமான குடிநீர் வழங்க திட்டமிட்டு ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தினை ரூபாய் 619 கோடியில் நிறைவேற்றினார். தற்போது அத்திட்டம் விரிவாக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணி 85சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இதன்மூலம் விடுபட்ட அனைத்து பகுதிகளுக்கும் சுகாதாரமான குடிநீர் வழங்கப்படும். அரசு திட்டங்கள் முறையாக நடைபெறுகிறதா என்பதை மக்கள் கண்காணிக்க வேண்டும். அது குறித்து அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவிக்க வேண்டும். மக்கள் நலனில் மிகுந்த அக்கறை உள்ள அரசாக தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. முதல்வர் தளபதி தலைமையிலான இந்த அரசு தலைவர் கலைஞர் வழியில் செயல்படும் அரசாக அமைந்துள்ளது. ஊராட்சிகளில் சிறிய அளவிலான திட்டங்களை நீங்களே நிறைவேற்றிக் கொள்ளலாம். அதற்கேற்ப இத்தகைய கூட்டங்களை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.



இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் கல்லல் ஒன்றியக்குழு தலைவர் திருமதி சொர்ணம் அசோகன், மாவட்ட வருவாய் அலுவலர் முனைவர் திருமதி செல்வநாயகி கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத், ஒன்றியக்குழு துணைத்தலைவர் நாராயணன் ஆணையாளர் மகாலிங்கம் மாவட்ட கவுன்சிலர் மஞ்சரிலட்சுமணன், பொதுக். குழு உறுப்பினர் கரு.அசோகன், கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பெருமாள் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, புதூர் கண்ணன், பிள்ளையார்பட்டி சதிஸ்,, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் அயலக அணி சன்சீமான்சுப்பையா, வர்த்தக அணி ருக்மாசரவணன், ஒன்றிய மாணவரணி சேர்மன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் உட்பட சுற்றுப்புற கிராம மக்கள்அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட ஊராட்சி உதவி இயக்குனர் கேசவதாசன் நன்றி கூறினார்.